**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பள்ளிப்பட்டு</u>**

**<u>அசல் வழக்கு எண். 91 /2021</u>**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி. G.செல்வி, நிலை III அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு **வா.த.சா. 1 –**ன் வாக்கு மூலம் 1872 ஆம் ஆண்டு 10 வது சட்டத்திற்குட்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **..திருமதி. விசாலம்** | **க/பெ** | **.. லேட்.ரமேஷ்** |
| **தொழில்** | **..** | **மதம்** | **..** |
| **வயது** | **.. 39** | **ஜாதி** | **..** |
| **வட்டம்** | **.. பள்ளிப்பட்டு** | **கிராமம்** | **.. ராமாபுரம்** |

**<u>வா.த.சா. 1 –ன் முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கின் 1 ம் வாதி ஆவேன். நான் எனது முதல் விசாரணையை சத்தியப் பிரமாண வாக்குமூலமாக இன்று தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை படித்துப்பார்த்து பிறகு கையொப்பம் செய்தேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நான் எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 17.11.1980 ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 14.06.2021 ம் தேதியிட்ட கம்ப்யூட்டர் 10(1) சிட்டா வா.த.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 12.07.2021 ம் தேதியிட்ட சாகுபடி அடங்கல் கிராம நிர்வாக அலுவலர் வழங்கியது **(ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)** சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 12.07.2021 ம் தேதியிட்ட 4 ம் வாதி பெயரில் உள்ள வரி இரசீது சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 12.07.2021 ம் தேதியிட்ட தாவா சொத்திற்கான கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய FMB சான்றிட்ட நகல் **(ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)** வா.த.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 26.06.2021 ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.த.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. பிரதிவாதியின் அஞ்சல் ஒப்புகை அட்டை வா.த.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. 14.07.2021 ம் தேதியிட்ட பிரதிவாதியின் பதில் அறிவிப்பு வா.த.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. வழிகாட்டி மதிப்பீடு வா.த.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**(பிரதிவாதி வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**

**ஒப்பம் A. தரணிதரன்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,**
**பள்ளிப்பட்டு**